International Journal of Advanced Multidisciplinary Research (IJAMR)
ISSN: 2393-8870
www.ijarm.com
Volume 3, Issue 5 -2016

ஆராய்ச்சிக் கட்டுரை

SOI: http://s-o-i.org/1.15/ijarm-2016-3-5-9

# சமண சமயம் கூறும் உயிர்த் தத்துவம்

**இரா.ஏழுமலை**

உதவிப் பேராசிரியர்
இராஜா நந்திவர்மன் கலை, அறிவியல் கல்லூரி,
தெள்ளாறு

**முக்கிய வார்த்தைகள்:**

ஆன்மா –புற ஆன்மா,
அகஆன்மா,
பர ஆன்மா

**சுருக்கம்**

மனிதன் இறைநிலையை அடைவதே வாழ்வின் பயன் என சமணத்தத்துவம் கூறுகிறது. உயிரின் பரிணாமமே கடவுள் என கூறுவோரும் உண்டு மேலும் சமணம் கடவுள் இல்லை என வரையறுத்தாலும் பரிசுத்த ஆன்மா இறைநிலையை அடையும் எனவும் நம்பினர். ஆன்மா உருவமற்றது உடம்பின் அளவிற்கு தக்கபடி பெரியதாகவும், சிறியதாகவும் அமையும். அதாவது எறும்பின் உடலுக்கு ஏற்றாற்போல் சிறியதாகவும், யானை உடம்பிற்கு ஏற்றாற்போல் பெரியதாகவும் அமையும் என்பது சமண சமயக் கொள்கையாகும்.

## முன்னுரை

ஒரு சமயத்தின் பல்வேறு கூறுகளும் இயல்புகளும் அச்சமய இலக்கியங்களில் பொதிந்து கிடக்கின்றன. கடவுள் வழிபாடு, அவ்வழிபாட்டோடு தொடர்புடைய மரபுகளும், சமய வழக்குகளும் சடங்கு முறைகளும், ஒழுக்க நெறிகளும் சமூக வழக்கில் இருந்தமையை இலக்கியங்கள் காட்டி நிற்கின்றன.

வாழ்வியல் நெறி இவ்வுலகில் சிறந்த ஒழுக்கத்தை அளிப்பதோடு இன்பத்தையும் அதனை அடைவதற்குரிய வழிகாட்டியாகவும் அமைகிறது என்பர் ஆன்றோர். ஒருவன் தன்னுடைய கடமைகளை நன்னெறி தவறாமல் செய்வதே அறம் எனப்பட்டது. அக்கடமை ஆர்வத்தோடும் மன ஊக்கத்தோடும் பய பக்தியோடும் செய்யப்படும்போது அது சிறப்படைகிறது. அவ்வகையில் சமண மதம் பல வாழ்வியல் தத்துவ நெறிகளை விளக்குகிறது. மனித வாழ்வின் பயன் என்பது இறையை அடைவது எனவும் சமயத் தத்துவம் கூறுகிறது. அவ்வகையில் உயிரின் பிறப்புப் பற்றியும் அது அடையும் முக்திபற்றியும் இடையில் நிகழும் செயல்கள் பற்றியும் தத்துவார்த்த நிலையில் பல கருத்துகளைச் சமணம் கூறுகிறது. இதனை,

“உயிரும்உயி ரல்லதும், புண்ணியம், பாவம், ஊற்றும்
செயிர்தீர் செறிப்பும், உதிர்ப்பும், கட்டும், வீடும், உற்ற
துயர்தீர்க்கும் தூய நெறியும்சுருக் காய்யுரைப்பன்
மயல்தீர்ந்த காட்சி யுடையோய் இது கேண்மதித்தே”
(மேரு. புராணம், பா.68)

என்று சமண சமயத் தத்துவத்தை மேருமந்திர புராணம் எடுத்துக் கூறுகிறது.

### உயிர் (ஜீவன்)

சமண சமயம் மாறுபட்ட சமயக் கொள்கைகளைக் கொண்டதாக உள்ளது. கடவுள் இல்லை என வரையறுக்கிறது. சிலர் பிரம்மம் என்ற ஒன்று உள்ளது எனவும், ஜீவன்கள் பிரம்மமே என்போரும் உளர். கடவுள்களும் உயிர்களும் வேறுவேறானவை. கடவுளின் பரிணாமமே உயிர் எனக் கூறுவோரும்

உண்டு. அவ்வகையில் மாறுபட்டு பரிசுத்த ஆன்மாவே இறைநிலையை அடையும் என்கிறது சமணம்.

உயிர் உருவமற்றது. எந்த உடலை அடைகின்றதோ, அந்த உடல் அளவு பரந்திருப்பது, வினையைச் செய்வது, அவ்வினைப் பயனை அனுபவிப்பது, பிறவியில் உழல்வது என உயிரின் பண்புகளைக் கூறுகிறது சமணம். உடம்பின் அளவுக்குத் தக்கபடியே உயிரானது பெரியதாகவும், சிறியதாகவும் அமையும் என்பது சமணர்களின் நம்பிக்கை ஆகும். அதாவது எறும்பின் மிகச் சிறிய உடலில் உள்ள உயிர் அதன் உடலுக்குத் தக்கபடி சிறியதாகவும், மிகப் பெரிய யானையின் உடம்பில் உள்ள உயிரானது அதன் உடம்புக்குத் தக்கவாறு மிகப் பெரியதாகவும் அமையும் என்பது சமண மதக் கொள்கை ஆகும்.

இதனை உணர்த்தும் வகையில் சமணர்களின் நீதி இலக்கியங்களுள் ஒன்றான பழமொழி நானூறும் இக்கருத்தை அரண் செய்யும் வகையில் ஒரு பாடலைப் பெற்றுள்ளதைக் காணலாம்.

“அரிகவித் தாசின் நுணர்ந்தவன் பாதம்
விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்
துரியதனிற் கண்டுணர்ந்தார் ஒக்கமே போலப்
பெரியதன் ஆவி பெரிது”

(பழ.நா.பா.1)

யானையாகப் பிறந்த உயிர் அடுத்த பிறவியில் எறும்பாகப் பிறக்கலாம். எறும்பாகப் பிறக்கும் அந்த உயிர். எறும்பின் உடல் அளவே பரந்திருக்கும். அதாவது ஓர் அறையின் நடுவே ஏற்றி வைத்த விளக்கின் ஒளி அறை முழுவதும் பரந்திருப்பது போல் உடல் முழுவதும் பரந்திருக்கும் என்பர். இத்தகைய உயிரானது முக்தி உயிர், பிறவி உயிர் என இரு வகைப்படும். முத்தி உயிரானது நல்வினை, தீவினை என்னும் இரு வினைகளையும் நீக்கி வீடுபேறு அடையும் தன்மை கொண்டதாகும். பிறவி உயிர் என்பது நல்வினை மற்றும் தீவினைகளில் கட்டுண்டு அவ்வினைப் பயன்களைத் துய்ப்பதற்காகச் சுவர்க்கம்,நரகம் இரண்டிலும் பிறப்பதும் இறப்பதுமாகத் திரியும் தன்மை கொண்டதாகும்.அவற்றுள் குறிப்பாக விலங்கு, நரகர், தேவர் என்ற பிறப்பினை அடைந்த உயிர்கள் அந்தப் பிறவிகளிலேயே வீடுபேறு அடைய இயலாது. மக்களாகப் பிறந்த உயிர்கள் மட்டுமே அதிலும் குறிப்பாகத் துறவு பூண்டவர்களுக்கு மட்டுமே வீடுபேறு கிட்டும். இல்லறத்தார்க்கு எப்போதும் வீடுபேறு கிடையாது என்பது சமண மதத்தின் உயிர்க் கொள்கையாகும். மேலும் உயிரானது,

ஓரறிவுயிர் – மரம், செடி, கொடி
ஈரறிவுயிர் – நத்தை, புழு
மூவறிவுயிர் – கறையான், பேன்
நாலறிவுயிர் – நண்டு, தேனி
ஐயறிவுயிர் – பறவை, பாம்பு, மனிதன்

என ஐந்து வகைப்படும் என்கிறது.

அறிவு வடிவான இந்த உயிர்த் தத்துவத்தை ஆன்மா என்றும், அந்த ஆன்மா மூன்று நிலைகளை உடையது என்றும் கூறுவர்.

1. புற ஆன்மா
2. அக ஆன்மா
3. பரமான்மா

### புற ஆன்மா

புற ஆன்மா என்பது உடலுக்கும் உயிருக்கும் வேறுபாடு அறியாமல் இரண்டையும் ஒன்று என்று கருதும் நிலையைக் குறிக்கும். மெய்யறிவு இல்லாத இந்நிலை அஞ்ஞான நிலை எனப்படும்.

### அக ஆன்மா

அக ஆன்மா என்பது உயிர் தன் மெய்யுணர்வு ஆற்றலால் உடல் வேறு. உயிர் வேறு என உணர்ந்து உயிர் அறிவு ‘இன்ப வடிவானது’ என்று கருதி அதன் வயமாகும் நிலையைக் குறிக்கும். இதனை மெய்யறிவு நிலை என அழைப்பர்.

### பரமான்மா

அக ஆன்ம நிலையை அடையும் உயிரானது இல்லற நிலையைத் துறந்து தன் உயிர் தூய நிலையில் பரிணமிக்கக்கூடிய துறவு நிலையை ஏற்று பின் தன் நிலையை அடையும் முயற்சியால் தூயநிலையை அடைகிறது. இதுவே பரமான்ம நிலையென்று அழைக்கப்படுகிறது. இப்பரமான்ம நிலையே துன்பம் இல்லாத முழு இன்பத்தைத் தரக்கூடிய நிலையாகும்.

எனவே பிறவிச் சுழற்சிக்குக் காரணமான புற ஆன்ம நிலையை ஒழித்து, முத்திக்கு வழியான அக ஆன்ம நிலையை ஏற்று, பொறி கடந்த இன்ப நிலையைத் தரக்கூடிய பரமான்ம நிலையை அடையவே எல்லோரும் முயற்சிக்க வேண்டும் என்பது சமணர்களின் ஆன்மா பற்றிய சிந்தனைகளின் முடிபாகும்.

பொறிகளுக்குப் புலப்படாத அருவப் பொருளான இவ்வுயிரில் அறிதல் முதலான பண்புகள் காணப்படுகின்றன என்பதும் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும்தான் உயிரின் குறிக்கோள் என்றும் இதனைப் பெறுவதே பயனுள்ளது என்றும் தத்துவார்த்த நிலையில் கூறப்படுகிறது.

உயிர் பற்றிய சமண சமயத்தின் தத்துவத்தைப் பிறவிச் சக்கரம் என்று கூறப்படும் சுவஸ்திகம் மிக அழகாகக் குறியீடாகக் காட்டுகின்றது.

இக்குறியீட்டில் உள்ள நான்கு முனைகளும் உயிர்கள் தாம் செய்த புண்ணியம் மற்றும் பாவங்களுக்கேற்ப தேவகதி, விலங்கு கதி, நரக கதி, மனித கதி என்னும் நான்கு கதிகளில் பிறந்து உழல்வதைக் குறிக்கின்றது. மேலே உள்ள மூன்று புள்ளிகளும் மும்மணிகளான நல் காட்சி, நல் ஞானம், நல் ஒழுக்கம் ஆகியவற்றைக் குறிக்கும். மூன்று புள்ளிகளுக்கு மேலே உள்ள பிறை போன்ற கோடும் அக்கோட்டின் மேல் உள்ள ஒற்றைப் புள்ளியும் வினைகளை விட்டு நீங்கிய உயிரைக் குறிக்கும். சமணக் கோயில்களிலும் சமண மதம் சார்ந்தோரின் இல்லங்களிலும் இக்குறியீடு இன்றளவும் பயன்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது.

### உயிரல்லது (அஜீவன்)

உயிரிடம் உள்ள குணங்களுக்கு நேர்மாறான குணங்கள் உடையதை உயிரல்லது எனக் கூறுவர். நல்வினை, தீவினை என்னும் இரு வினைகளுக்குள் உழன்று பிறந்து இறந்து உழல்வதும், பின் இவற்றைக் கட்டறுத்து வீடுபேறு அடைவதும் என உயிருக்குக் கூறப்பட்ட தன்மைகள் எதுவும் அஜீவனுக்குக் கிடையாது.

உயிரல்லது எனக் கூறப்படும் பொருள்கள் ஐந்தாகும். அவை,

- புத்கலம், தர்மம், அதர்மம், காலம், ஆகாயம்

ஆகியன ஆகும். உயிரை எங்ஙனம் கடவுள் படைக்கவில்லையோ அதுபோல் இவற்றையும் கடவுள் படைக்கவில்லை என்பது சமண மதக் கொள்கை ஆகும்.

## முடிவுரை

சமண சமயம் பொருட்களின் இயல்புகள் பற்றியும் உயிர்கள் இன்பம் அடைவதற்கான வழிகள் பற்றியும் பலவேறான உண்மைகளை வெளிக்காட்டி நிற்கிறது. உலக உயிர்கள் யாவும் அடிப்படையில் இன்பத்தையே நாடுகின்றன. அவ்வாறு இன்பத்தை அடைந்தாலும் இறுதியில் துன்பமே மிஞ்சுகிறது. ஏனெனில் உயிர் நல்வினை தீவினை என்னும் இரு வினைகளுக்குள்ளும் உழன்று துன்பம் அடைகிறது என்பர்.

## துணை நூல்கள்


1. மேருமந்திர புராணம், பானுராசனார். ஜெ. – 2009
2. பழமொழி நானூறு
3. ஆத்மானு சாசனம், ஆசாரிய ஸ்ரீ குணபத்திர சுவாமி – 2006
4. சமணம் (அடிப்படைக் கொள்கைகள்), கொற்றன் காரி. ஊ – 2005
5. பாரஸ அணுவேக்கா, ஆசாரிய குந்த குந்த தேவர் - 2006


****************


| Access this Article in Online | |
|---|---|
| | **Website:** www.ijarm.com |
| | **Subject:** Tamil |
| **Quick Response Code** | |

**How to cite this article:**
இரா.ஏழுமலை. (2016). சமண சமயம் கூறும் உயிர்த் தத்துவம். Int. J. Adv. Multidiscip. Res. 3(5): 74-76.